DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**C.C.No. 2/2022**

**அ.சா.–1**

பெயர் : திருமதி. சுமதி தேதி : 24.10.2024

(சாட்சி CMP.No. 2317/2024 ல் 21.09.2024 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை )
( எதிரிகள் 1, 2 ஆஜர். )

**குறுக்குவிசாரணை**:– ( எதிரிகள் தரப்பில்)

எனக்கு எழுத, படிக்க தெரியாது. போலீஸ் விசாரணையின்போது நான் கூறிய தகவல்களை என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய புகார் அ.சா.ஆ.–1ல் எதிரிகள் திருப்பதி, கௌதமன் மற்றும் ஒரு அம்மாசி தாக்கியதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய இளைய மகன் தர்மனுக்கு (அ.சா.–3) போன் செய்யவில்லை. என்னுடைய மகன் தனபாலும் அ.சா.–3 க்கு போன் செய்யவில்லை என்றால் ஆமாம். என்னுடைய இளைய மகன் தர்மன் அ.சா.–3, 7.30 மணியளவில் சம்பவ இடமான வீட்டிற்கு வந்தார்.

நானும், அ.சா.–2, 3 என்னுடைய மகன்களோ போலீசாருக்கு போன் செய்யவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் நான் சமையலறையில் இருந்தேன் என்றால் ஆமாம். சத்தம் கேட்டு நான் ஓடிவந்தேன் என்றால் ஆமாம். அ.சா.–2 க்கு மேல் ஒரு பல் உடைந்து விட்டது, கீழ் பற்கள் ஆட்டம் கண்டது. அந்த விவரத்தை நான் புகாரிலும், போலீஸ் விசாரணையின்போதும் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். அ.சா.–2 க்கு தலை, முகத்தில் இடது கையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டது. அ.சா.–1, 2 அணிந்திருந்த துணிகளில் இரத்தம் ஆனது என்றால் ஆமாம். அதனால் நனைந்துவிட்டது என்றால் ஆமாம். வீட்டில் இருந்த டியூப் லைட் LED பல்ப் என்றால் ஆமாம். ஒரு டியூப் லைட் உடைந்துவிட்டது. எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன்பகை இருந்தது சம்மந்தமாக சம்பவத்திற்கு முன்னர் போலீசாரிடம்

புகார் தரவில்லை. அறுவாள்மனை பற்றி விவரங்களை குறிப்பிட்டு போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் தொன்னையில் அடித்ததாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். அ.சா.–3 என்னுடைய மகன் காவல்நிலையத்திற்கு முதலில் அழைத்துச் சென்றுவிட்டு பின்னர் என்னை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார். இரவு 8 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். நானும் என்னுடைய இரண்டு மகன்களுடன் காவல்நிலையத்திற்கு சென்றோம். நான் சொல்லி போலீசார் புகார் எழுதினார். எழுதிய போலீசாரின் பதவி தகுதிநிலை எனக்கு தெரியாது. 11.30 மணி வரை காவல்நிலையத்தில் இருந்தோம். 11.30 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து புறப்பட்டு ஓமலூர் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனைக்கு சேர்ந்த நேரம் தெரியாது. மருத்துவமனையில் நானும் அசா–2ம் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டோம் என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு போலீசார் அரசு மருத்துவமனையில் என்னை விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் நான் ஒரு கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். என்னுடைய இரு மகன்களும் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார்கள். என் மகன்கள் இருவரும் அந்த புகார் வாக்குமூலத்தை என்னிடம் படித்து காண்பிக்கவில்லை.

சம்பவ சமயத்தில் அசா–2 ஒரு திருப்பதி என்பவரை வெட்டி கொலை செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.–2 மீது தீவட்டிப்பட்டி போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து S.C.No. 205/2018 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் ஆமாம்.

அ.சா.–2 சம்பவ சமயத்தில் அரை மணி நேரம் மயக்கத்தில் இருந்தார். என் மகனை கொலை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்யான ஒரு புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**C.C.No. 2/2022**

**அ.சா.– 2**

பெயர் : திரு. தனபால் தேதி : 24.10.2024

(சாட்சி CMP.No. 2317/2024 ல் 21.09.2024ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை )

( எதிரிகள் 1, 2 ஆஜர். )

**குறுக்குவிசாரணை**:– ( எதிரிகள் தரப்பில்)

நான் போலீஸ் விசாரணையில் கூறிய சங்கதிகள் அனைத்தையும் முதல்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். அ.சா.–3 க்கு நான் தகவல் சொல்லவில்லை. ஊர்க்காரர்கள் தகவல் சொன்னார்கள். அவர்கள் பெயர் விவரம் தெரியாது. அ.சா.–3, 7.30 மணியளவில் வீட்டிற்கு வந்தார். நானோ, அ.சா.–1 மற்றும் அ.சா.–3 போலீசாருக்கோ அல்லது 108 ஆம்புலன்சுக்கோ போன் செய்யவில்லை என்றால் ஆமாம். ஷேர் ஆட்டோ மூலமாக முதலில் காவல்நிலையத்திற்கு சென்றோம். காவல்நிலையத்தில் என் அம்மா புகார் வாக்குமூலம் கொடுத்தார். நான் கொடுக்கவில்லை. நானும் என் தம்பியும் புகாரை எழுதி தரவில்லை. எந்த போலீசார் காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் எங்களுடன் வந்து ஓமலூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்துவிட்டு போனார். அந்த போலீசார் பெயர் ஞாபகமில்லை. நான் வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு செல்லும்போதும், அங்கிருந்து மருத்துவமனைக்கு சென்றபோதும் மயக்க நிலையில் இருந்தேன் என்றால் ஆமாம்.

போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. ஓமலூர் மருத்துவமனையில் சுமார் 11.30 மணியளவில் அட்மிட் ஆனோம். எனக்கு 5 பல்லில் அடிபட்டு ஒரு பல் உடைந்துவிட்டது. அந்த விவரத்தை போலீசார் விசாரணையின்போது கூறியுள்ளேன். சம்பவ சமயத்தில் எனக்கும் என்

அம்மாவுக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் ஆமாம். எனக்கு தையல் போடும் அளவிற்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் ஆமாம். நான் அணிந்திருந்த துணிகளில் இரத்தம் ஏற்பட்டு நனைந்துவிட்டது என்றால் ஆமாம். அந்த துணிகளில் போலீசாரிடம் ஒப்படைத்தேன். உடைந்த டியூப் லைட் LED பல்ப் அல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் முன்பகை இருந்தது என்பது சம்மந்தமாக அதற்கு முன்னர் புகார் எதுவும் தரவில்லை என்றால் ஆமாம். ஊர் பெரியவர்கள் மூலம் பஞ்சாயத்து பேசினோம். பஞ்சாயத்து பேசிய விவரத்தை போலீஸ் விசாரணையில் நான் கூறினேன். தொன்னையில் தாக்கிய விவரத்தையும் போலீஸ் விசாரணையில் கூறினேன். என்மீது திருப்பதி என்பவரை கொலை செய்ததாக S.C.No. 205/2018 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் ஆமாம். அந்த கொலை வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது ஒரு பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்மீதுதான் பொய் வழக்கு போட்டுள்ளார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.